**29.04.2026**

**அ.வ.எண். 95/2018**

**வா.சா.1 – திருமதி.ஜோதிமணி, த/பெ. ஆறுமுகத்தேவர்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 29.04.2026 is accordance with the provision of Act X of 3331

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுத படிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் தற்போது இருகூரில் வசித்து வருகிறேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் என் அம்மா லட்சுமியம்மாள், ராமாத்தாள் என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கினார். தாவா சொத்தில் தற்போது யாரும் வசிக்கவில்லை, இடிந்த நிலையில் உள்ளது. எத்தனை வருடங்களாக இடிந்த நிலையில் உள்ளது என்றால் என் அம்மா வாங்கி 2 வருடங்கள் உபயோகப்படுத்தி விட்டு பின்னர், உபயோகப்படுத்தாமல் இருந்ததால் இடிந்த நிலையில் உள்ளது.

2. என் அம்மா வாங்கி 2 ஆண்டுகள் கழித்து இடிந்து விட்டது என்றால் சரிதான். தாவா சொத்திற்கும், பிரதிவாதிகளின் சொத்திற்கும் இடையே கிழமேலாக ஒரு சுற்றுச்சுவர் உள்ளது என்றால் சரிதான். சுற்றுச்சுவருக்கு வடபுறத்தில் என் தாயார் சுவாதீனத்திலும், தென்புறத்தில் பிரதிவாதிகளின் சுவாதீனத்திலும் சொத்து இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்திற்கும், அதன் தென்புறத்திலுள்ள பிரதிவாதிகளின் சொத்திற்கும் மேல்புறத்தில், தென்வடலாக பஜனை கோவில் வீதி உள்ளது என்றால் சரிதான். 2011 ம் ஆண்டு, பிரதிவாதி அவருடைய தாவா சொத்திற்கு மேல்புறத்தில் தென்வடலாக ஒரு சுற்றுச்சுவர் எழுப்பினார் என்றால் சரிதான்.

3. பிரதிவாதி அவ்வாறு கட்டக்கூடாது என எனது தாயார் வழக்கு தாக்கல் செய்தார். அதில் பிரதிவாதிகள் Counter Claim வுடன் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். அ.வ.எண்.64/2017 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி

வழக்கின் தீர்ப்பில் கிழமேல் சுவற்றுக்கு வடபுறமாக உள்ள வாதிகளின் சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்றும், தென்புறமாக உள்ள பிரதிவாதிகளின் சொத்தில் நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என்றும், தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சுவற்றில் மேல்புறமாக சுவர் எழுப்ப நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பை எதிர்த்து நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு மேல்முறையீடு செய்யாமல் பழைய பிரச்சனைகளை காரணம் காட்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

4. பழைய வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் ஒரே வழக்கு மூலம் என்றால் சரிதான். தாவா சொத்து அசல் வழக்கு எண்.64/2017 மற்றும் இந்த வழக்கில் சொத்தும் ஒன்றுதான். இரு வழக்கிலும் ஒரே தரப்பினர்கள் என்றால் சரிதான். என்னுடைய வழக்கு முன் தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதிகளின் சொத்திற்கு இடையே உள்ள கிழமேல் சுற்றுச்சுவர் ஆனது 2011 ம் ஆண்டிற்கு முன்பிருந்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது, என் அம்மாவிற்கு தான் தெரியும். காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு கால வரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

குறுக்குவிசாரணை வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur